# BSNL ஊழியர் சங்கம்
## தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:113** **தேதி:-02.07.2016**

***செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவோம்***
***மத்திய பொதுத்துறை தொழிற்சங்கங்களின் கருத்தரங்கம் முடிவு***

அன்பார்ந்த தோழர்களே,

02.07.2016 அன்று ஹைதராபாத், காந்தி பவனில் மத்திய பொதுத்துறை தொழிற்சங்கங்களின் கருத்தரங்கம் நடைபெற்றது. செப்டம்பர் 2 வேலை நிறுத்தத்தை வெற்றிகரமாக்குவதே இந்த கருத்தரங்கின் முக்கிய நோக்கமாகும். பல பொதுத்துறை நிறுவனங்களை பிரதிநிதித்துவம் படுத்தும் வகையில் 450 சார்பாளர்கள் அந்த கருத்தரங்கில் கலந்துக் கொண்டனர். INTUC சங்கத்தின் தலைவர் தோழர் சஞ்சீவ ரெட்டி இந்த கருத்தரங்கை துவக்கி வைத்தார். தோழர் தபன் சென் MP., GS-CITU, தோழர் H. மஹாதேவன் செயல்தலைவர் AITUC, தோழர் சுவதேஷ் ராய் செயலாளர் CITU, தோழர் சண்முகம் GS LPF உள்ளிட்ட மூத்த தலைவர்கள் உரையாற்றினார்கள். தோழர் தபன் சென் முன்மொழிந்த அறிக்கையினை இந்த கருத்தரங்கம் ஏகமனதாக ஏற்றுக் கொண்டது. BSNL ஊழியர் சங்கத்தின் சார்பாக தோழர் P.அபிமன்யு GS, தோழர் P.அசோகா பாபு VP CHQ, தோழர் J.சம்பத்ராவ் AGS ஆகியோர் கலந்துக் கொண்டனர். நமது பொது செயலாளர் தோழர் P.அபிமன்யு உள்ளிட்ட 27 சார்பாளர்கள் விவாதத்தில் பங்கேற்றனர். செப்டம்பர் 2 வேலை நிறுத்தம் ஒரு வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை பெறும் வண்ணம் பரவலான பிரச்சாரங்களை மேற்கொள்வது என இந்த கருத்தரங்கம் ஏகமனதாக தீர்மானித்தது.

**குழந்தை பேறு விடுமுறையை 26 வாரங்களாக உயர்த்த அரசாங்கம் முடிவு**:- குழந்தை பேறு விடுமுறையை 26 வாரங்களாக உயர்த்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும், வரும் பாராளுமன்றக் கூட்டத்தில் இதற்கான மசோதாவை தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டு வருவதாகவும், செய்திகள் தெரிவிக்கின்றன. இதனை அரசுத்துறை மற்றும் பொதுத்துறைகளில் மட்டுமல்லாமல், தனியார் துறையிலும் அமுலாக்க வேண்டும் என அரசு முடிவெடுத்துள்ளது. இந்த சட்டம் அமுலாக்கப்பட்டால், உழைக்கும் பெண்களுக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக இருக்கும் என்பதில் ஐயமில்லை. அதே சமயம் தனது தொழிலாளர்களுக்கு எதிரான கொள்கைகளை மூடி மறைக்கவே இந்த அரசாங்கம் இது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்கிறது என்பதையும் நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். பெரு முதலாளிகளுக்கும், பன்னாட்டு பகாசூர கம்பெனிகளுக்கும் ஒரு புறம் ஏகப்பட்ட சலுகைகளை வாரி வழங்கிக் கொண்டு இருக்கிறது. மற்றொரு புறம் இருக்கின்ற தொழிலாளர் நல சட்டங்கள் அனைத்தையும், முதலாளிகளுக்கு பலனளிக்கும் வகையில் திருத்தம் செய்ய முயற்சி செய்து வருகிறது. தனது தொழிலாளர்களுக்கு எதிரான, பெரு முதலாளிகளுக்கு ஆதரவான கொள்கைகளை மூடி மறைக்கவே, குழந்தை பேறு விடுப்பு போன்ற சிறிய பலன்களை அரசு அறிவிக்கின்றது.

**மொத்த தொலைபேசிகள் குறைந்தாலும், BSNL தொலைபேசிகள் உயர்வு**:- 2016, மே மாதத்தில் நாட்டில் உள்ள மொத்த தொலைபேசிகளின் எண்ணிக்கை 0.2 மில்லியனும்,மொபைல் தொலைப்பேசி இணைப்புகளின் எண்ணிக்கை 0.43 மில்லியனும் குறைந்துள்ளது. ரிலையன்ஸ் (1.2 மில்லியன்), டாட்டா (0.2 மில்லியன்) மற்றும் வோடோபோன் (5.2 மில்லியன்) தங்கள் வைத்திருந்த இணைப்புகளை இழந்துள்ளன. 31.05.2016 வரையிலான கணக்குகளின் படி இந்தியாவில் மொத்தம் 1.1 பில்லியன் தொலைபேசி இணைப்புகள் உள்ளன. அதில் 103 மில்லியன் இணைப்புகளை BSNL வழங்கியுள்ளது. அது 9.73% சந்தை பங்கீட்டோடு 4ஆவது இடத்தில் உள்ளது. BSNLன் சந்தை பங்கீடு மே மாதத்தில் 0.1 சதவிகிதமும், 2016-17ல் மே மாதம் முடிய காலத்தில் 0.14 சதவிகிதமும் உயர்ந்துள்ளது.

**கிளை, மாவட்ட, மாநில மாநாடுகள்**:- BSNL ஊழியர் சங்கத்தின் அகில இந்திய மாநாடு 31.12.2016 முதல் 03.01.2017 வரை சென்னையில் நடைபெற உள்ளது. எனவே நடத்தப்பட வேண்டிய தேதிகளுக்குள் அனைத்து கிளை, மாவட்ட மாநில மாநாடுகளையும் நடத்தி முடித்துவிட வேண்டும் என்றும், கிளை, மாவட்ட மாநாடுகளை குறிப்பிட்ட தேதிகளுக்குள் நடத்துவதி மாநில சங்கங்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் மத்திய சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. எனவே நமது தமிழ் மாநிலத்திலும், மாநாடுகள் நடத்தப்பட வேண்டிய கிளை சங்கங்களும், அனைத்து மாவட்ட சங்கங்களும் தங்களின் மாநாடுகளை மேல் மட்ட அமைப்புகளுடன் கலந்து பேசி தேதிகளை இறுதி செய்ய வேண்டும் என தமிழ் மாநில சங்கம் கேட்டுக் கொள்கிறது.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**